PODHU ARIVU
TNPSC FREE BOOK 06


# பொது அறிவு

English & Tamil Monthly

**FREE**

Vol : 6 | Issue : 02 | February 2021 | Pages 36 | Price : ₹33/-        RNI No. TNBIL/2016/69097



## அரசு வேலை ரெடி நீங்க ரெடியா?

# 200 TNPSC வினாத்தாளில் இலவச பயிற்சி

FEB. 6

# PODHUARIVU
# பொது அறிவு

★ ENGLISH & TAMIL MONTHLY ★

VOL. 6; ISSUE : 2; FEBRUARY 2021

PRICE : RS.33.00

**FOR CAREER ASPIRANTS**

**SCHOOL / COLLEGE STUDENTS**

**PROFESSIONALS**

**JOB ASPIRANTS**

*Editor*

**UMADHEVI RAVI**

& Raman's Editorial Board

**SUBSCRIPTION / ADVERTISING**

Cell : 9710250750 (10 – 6 P.M)

**SUBSCRIPTION RATES**

**One Year : Rs. 500/-**

**THREE YEARS**

**SPECIAL OFFER : RS.1300/-**

(includes Postage & handling cost)

***Remit your subscription by M.O (or) Draft to*** :

**G.K.POWER**

**# 25, Fourth Main Road, Indira Nagar, Chennai-20**

✦ *Publishers are not responsible for mistakes and views expressed by the authors.* ✦ *No portion of the magazine can be reproduced without the prior written permission of the Publishers.* ✦ *Publishers are not responsible either for any postal delay or non-receipt of the magazine.* ✦ *All disputes are subject to the exclusive jurisdiction of the Chennai Courts only.* ✦ *Answers to all the question papers are based on the key released by the TNPSC, if any correction brought to our notice, same will be corrected and notified in the following issue.*

# TNPSC
# பொதுத் தமிழும் பொது அறிவும்

(SSLC STD.,) &

பட்டப்படிப்பு

அளவிலான

வினாத்தாள்கள்

**400**

வினா – விடைகள்

பயிற்சி அவசியம்...

வெற்றி நிச்சயம்...

வாரந்தோறும் வெளியாகும்

**FREE**

டவுன்லோடு செய்க

நண்பர்களுக்கும் பகிரவும்

# Bhawana Kanth

★ Bhawana Kanth is one of the first female fighter pilots of India.

★ She was declared as the first combat pilot along with two of her cohort, Mohana Singh, and Avani Chaturvedi.

★ The trio was inducted into the Indian Air Force fighter squadron in June 2016.

★ They were formally commissioned by Defence Minister Manohar Parrikar.

★ After the government of India decided to open the fighter stream in India Air Force for women on an experimental basis, these three women were the first to be selected for the program.

★ In May 2019, she became the first female fighter pilot in India to qualify to undertake combat missions.

★ Kanth was born on 1 December 1992 in Darbhanga, Bihar.

★ Her father Tej Narayan Kanth is an electrical engineer in Indian Oil Corporation and mother Radha Kanth is a home maker.

★ While growing up, Kanth was fond of sports like Kho Kho, Badminton, swimming and painting.

★ Kanth completed her schooling from DAV Public School in Barauni refinery.

★ She prepared for engineering entrance examinations in Kota, Rajasthan.

★ Kanth joined Bachelor of Engineering in Medical Electronics from BMS College of Engineering, Bengaluru for further studies.

★ She graduated in 2014 and was recruited for IT giant Tata Consultancy Services.

★ Kanth had always dreamt of flying planes.

★ She took the Air Force Common Admission Test and was selected to be commissioned into the Air Force.

★ As a part of her Stage 1 training, she joined the fighter stream.

★ In June 2016, Kanth underwent a six month long stage-II training on Kiran Intermediate Jet Trainers at Hakimpet Air Force Station in Hyderabad soon after which she got commissioned as Flying Officer at Combined Graduation Parade Spring Term at the Air Force Academy in Dundigal, Telangana the same year.



★ Kanth flies Hawk advanced jet trainers and it has been the plan to move her and the other two members of her cohort to MIG 21 Bison squadron.

★ Flying Officer Bhawana Kanth on 16 March 2018 takes the solo flight of Mig-21 'Bison'. She made the solo flight of Mig-21 from Ambala Air Force Station at around 1400 hours.

★ Kanth also tried some modelling assignments and appeared in print advertisements.

★ On March 9th, 2020, she was awarded with Nari Shakti Puraskar by President Ram Nath Kovind.

★ She is posted to the Indian Air Force's No. 3 Squadron Cobras.

6

# பொதுத் தமிழ்

## பகுதி–அ

## இலக்கணம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

### இலக்கணப் பிழை :

| பிழை | திருத்தம் |
|---|---|
| அவனல்ல | அவனல்லன் |
| அது அல்ல | அது அன்று |
| அவரல்ல | அவரல்லர் |
| அவை அன்று | அவை அல்ல |

ஒரு, ஓர் என்னும் இரு சொற்களும் ஒன்று என்னும் பொருளைத் தரு வன. உயிரெழுத்து முதலில் வரும் சொற்களின் முன் ஓர் எனவும் உயிர், மெய்யெழுத்து முதலில் வரும் சொற்களின் முன் ஒரு எனவும் அமைதல் வேண்டும். (எ.டு) ஓர் அரசன் ஒரு மரம், ஓர் இலை ஒரு நாடு.

### மரபு வழுக்களும், திருத்தமும்

| மரபுவழு | திருத்தம் |
|---|---|
| ஆட்டுப்பாகன் | ஆட்டிடையன் |
| தென்னங்கன்று | தென்னம்பிள்ளை |
| யானைக்குட்டி | யானைக்கன்று |
| மாந்தோட்டம் | மாந்தோப்பு |
| கீரிக்குட்டி | கீரிப்பிள்ளை |
| நாய் | நாய் |
| மான்குட்டி | மான்கன்று |
| கத்துகிறது | குரைக்கிறது |
| புலி கத்துகிறது | புலி உறுமுகிறது |
| மயில் | மயில் |
| யானை | யானை |
| கூவுகிறது | அகவுகிறது |
| கர்ச்சிக்கிறது | பிளிறுகிறது |
| கிளி | கிளி |
| கழுதை | கழுதை |
| கத்துகிறது | கொஞ்சுகிறது |
| கனைக்கிறது | கத்துகிறது |
| சிங்கம் உறுமும் | சிங்கம் முழங்கும் |

### வழூஉச் சொற்களும் திருத்தமும்

பேச்சு வழக்கில் சில சொற்கள் தவறாகவும் கொச்சையாகவும் பேசப் படுகின்றன. அவற்றில் உள்ள பிழைகளை விலக்கித் திருத்தமான சொற்களையே எழுத்தில் கையாள வேண்டும். வழக்கில் தவறாக வழங்கும் சில சொற்களும், அவற்றுக்குரிய திருத்தமான சொற்களும் இங்குத் தரப்பட்டுள்ளன.

| வழு | திருத்தம் |
|---|---|
| அதுகள் | அவை |
| கடகால் | கடைக்கால் |
| அடமானம் | அடைமானம் |
| கழட்டி | கழற்றி |
| அமக்களம் | அமர்க்களம் |
| கவுறு | கயிறு |
| அத்தினி | அத்தனை |
| கார்த்தாலே | காலையில் |
| அகண்ட | அகன்ற |
| கார்த்தல் | காத்தல் |
| அட மழை | அடைமழை |
| கண்ணாலம் | கல்யாணம் |
| அருகாமையில் | அருகில் |
| காக்ஷி | காட்சி |
| அழும்பு | அழிம்பு |
| கினா | கனா, கனவு |
| ஆக்ஷி | ஆட்சி |
| கிராணம் | கிரகணம் |
| ஆமா | ஆமாம் |
| கினவு | கனவு |
| ஆத்துக்கு | அகத்துக்கு |
| குதுவை | கொதுவை |
| ஆச்சு | ஆயிற்று |
| குத்துயிர் | குற்றுயிர் |
| இடது கை | இடக்கை |
| குளந்தை | குழந்தை |
| இரும்பல் | இருமல் |
| குடக்கூலி | குடிக்கூலி |

| வழு | திருத்தம் |
|---|---|
| இடதுபக்கம் | இடப்பக்கம் |
| கேழ்வி | கேள்வி |
| இத்தினி | இத்தனை |
| கொறவளை | குரல்வளை |
| ஈருளி | ஈர்கொல்லி |

| | |
|---|---|
| கோடாலி | கோடரி |
| உந்தன் | உன்றன் |
| கோர்வை | கோவை |
| உடம்படிக்கை | உடன்படிக்கை |
| சந்தணம் | சந்தனம் |
| உடமை | உடைமை |
| சங்கலி | சங்கிலி |
| உத்திரவு | உத்தரவு |
| சமயல் | சமையல் |
| ஊரணி | ஊருணி |
| சம்மந்தம் | சம்பந்தம் |
| எடக்கு | இடக்கு |
| சாயங்காலம் | சாயும்காலம் |
| எளக்காரம் | இளக்காரம் |
| சாத்து | சார்த்து |
| எம்பளது | எண்பது |
| சாக்ஷி | சாட்சி |
| எந்தன் | என்றன் |
| சிலது | சில |
| எழவு | இழவு |
| சிலவு | செலவு |
| எண்ணை | எண்ணெய் |
| சிகப்பு | சிவப்பு |
| ஒருவள் | ஒருத்தி |
| சீயக்காய் | சிகைக்காய் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் |
| சுதந்திரம் | சுதந்தரம் |
| சுவற்றை | சுவரை |
| பலது | பல |
| சேர்வை | சேவை |
| புஞ்சை | புன்செய் |
| சோம்பேரி | சோம்பேறி |
| புட்டு | பிட்டு |
| தலக்காணி | தலையணை |
| புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| தடுமாட்டம் | தடுமாற்றம் |
| பேரன் | பெயரன் |
| தாப்பாள் | தாழ்ப்பாள் |
| பேத்தி | பெயர்த்தி |
| தாவாரம் | தாழ்வாரம் |
| போறும் | போதும் |
| திரேகம் | தேகம் |
| மச்சினன் | மைத்துனன் |
| **வழு** | **திருத்தம்** |
| திருவாணி | திருகாணி |
| மனது | மனம் |
| தீவட்டி | தீவத்தி |
| மாயிலை | மாவிலை |

| | |
|---|---|
| தீவாளி | தீபாவளி |
| மாக்ஷி | மாட்சி |
| துகை | தொகை |
| மாத்து | மாற்று |
| துடை | தொடை |
| மாரில் | மார்பில் |
| துவங்கு | தொடங்கு |
| முந்தாணி | முன்றானை |
| துறவுகோல் | திறவுகோல் |
| முறிதல் | முரிதல் |
| துடங்குதல் | தொடங்குதல் |
| முழித்தான் | விழித்தான் |
| துலைந்தது | தொலைந்தது |
| முழிந்தான் | உமிழ்ந்தான் |
| தேனீர்க்கடை | தேநீர்க்கடை |
| மோர்ந்து | மோந்து |
| தொந்திரவு | தொந்தரவு |
| ரொம்ப | நிரம்ப |
| நஞ்சை | நன்செய் |
| வலதுகை | வலக்கை |
| நாகரீகம் | நாகரிகம் |
| வல்லுனர் | வல்லுநர் |
| நாட்கள் | நாள்கள் |
| வாய்ப்பாடு | வாய்பாட்டு |
| நாத்தம் | நாற்றம் |
| விரை | விதை |
| நாநூறு | நானூறு |
| விசிரி | விசிறி |
| நிலமை | நிலைமை |
| வெண்ணை | வெண்ணெய் |
| நிகளம் | நீளம் |
| வெய்யல் | வெயில் |
| நேத்து | நேற்று |
| வெக்கம் | வெட்கம் |
| நொங்கு | நுங்கு |
| வெட்டிப்பேச்சு | வெற்றுப்பேச்சு |
| நோம்பு | நோன்பு |
| வெத்திலை | வெற்றிலை |
| பதட்டம் | பதற்றம் |
| வென்னீர் | வெந்நீர் |
| பயிறு | பயிர் |
| வேணாம் | வேண்டாம் |
| பண்டகசாலை | பண்டசாலை |
| வேணும் | வேண்டும் |

## வாக்கிய வகைகள்

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளவும் மொழிப் பயிற்சி இன்றியமையாதது. மொழியைப் பற்றியும் அதன்

அமைப்பைப் பற்றியும் இலக்கணத்தின் மூலம் அறிகிறோம். அவ்விலக்கணத்தோடு மொழிச்சார்பான வாக்கிய அமைப்பு முறைகள், மரபுகள் முதலியவற்றை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.மொழியை எவ்வெவ்வாறு எவ்வெவ்விடத்தில் கையாள வேண்டும் என்பதை அமைப்பதும், மொழிப் பயிற்சியாகும். தமிழ் மொழியில் தக்க புலமை அடைவதற்குரிய உத்தியையும் மொழிப் பயிற்சி அளிக்கும்.

## வாக்கியம்

பொருள் முடிவு பெற்றிருக்கின்ற சொற்றொடர் வாக்கியம் எனப்படும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன வாக்கியத்தின் முக்கிய உறுப்புகளாம்.

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் மற்றும் வினையாலணையும் பெயர் எழுவாயாக வரும்.

தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, பெயர்ச்சொல், வினாப்பெயர் ஆகியன பயனிலையாய் வரும்.

## வாக்கிய வகைகள்

பொருள் முடிவு பெற்றிருக்கின்ற சொற்றொடர் வாக்கியமாகும். வாக்கியங்கள் இலக்கண முறைப்படி அமைவதோடு, பொருள் பொருத்தமுறவும், இனிமையாகவும் அமைய வேண்டும்.

ஒரு வாக்கியத்தின் இன்றியமையா உறுப்புகள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என மூன்றாம். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் வந்தாலும் வரும்; வராமலும் அமையும். பெரும்பாலும் வாக்கியத்தில் எழுவாய், முதனிலை, பயனிலை இறுதியிலும், செயப்படு பொருள் இடையிலும் வரும். விரைவு, வெகுளி, மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களில், இம்முறை மாறி வருதலும் உண்டு.

(எ.டு) 1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

2. கனிமொழி பேசினாள்.

3. கண்டான் இராமன் சீதையை

1. இளங்கோவடிகள் – எழுவாய்
இயற்றினார்– பயனிலை
சிலப்பதிகாரம் – செயப்படுபொருள்

2. கனிமொழி – எழுவாய்
பேசினாள் – பயனிலை
(செயப்படுபொருள் இவ்வாக்கியத்தில் இல்லை)

3. கண்டான் – பயனிலை, வாக்கியத்தின் முதலில் வந்தது.
(ஆறுவகைப் பெயர்ச்சொற்களும், வினையாலணையும் பெயரும் எழுவாயாக வரும். வினைமுற்று, பெயர்ச்சொல், வினாப்பெயர் முதலியன பயனிலையாக வரும்.)

(எ.டு) கண்ணன் பாடம் எழுதுகிறான் – பெயர்ச்சொல் எழுவாயாக வந்தது.

கொடுத்தவர்–புகழ் பெறுவர் – வினையாலணையும் பெயர் எழுவாயாக வந்தது.

அமுதா ஓவியம் வரைகின்றாள் – தெரிநிலை வினைமுற்று பயனிலையாக வந்தது.

குழலினிது – குறிப்பு வினைமுற்று பயனிலையாக வந்தது.

பாரதியார் கவிஞர் – பெயர்ச்சொல் பயனிலையாக வந்தது.

சேக்கிழார் யார்? – வினாப்பெயர் பயனிலையாக வந்தது.

ஒரு கருத்தைப் பலவித வாக்கியங்களில் அமைத்து எழுதும் பயிற்சியை மாணவர்கள் பெற வேண்டும். அப்பொழுதுதான் தாம் எழுதும் கட்டுரை, கதை, கவிதைகள் கருத்தால் மட்டுமின்றிச் சொல்லுகின்ற முறையாலும் சிறப்புப் பெறும்.

வாக்கியங்கள் செய்தி வாக்கியம், வினாவாக்கியம், விழைவு வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம், தன்வினை–பிறவினை வாக்கியம். செய்வினை–செயப்பாட்டு வினை வாக்கியம், உடன்பாட்டு வினை வாக்கியம், எதிர்மறை வாக்கியம், நேர்க்கூற்று – அயற்கூற்று வாக்கியம் எனப் பல வகைகளில் அமையும்.

## ஒரு வகை வாக்கியத்தை வேறொரு வாக்கியமாக மாற்றுதல்

### செய்தி வாக்கியம் – கட்டளை வாக்கியம்

இளமையில் கற்க வேண்டும்.
இளமையில் கல்

### செய்தி வாக்கியம் – உணர்ச்சி வாக்கியம்

வள்ளுவர் கோட்டம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது.

என்னே! வள்ளுவர் கோட்டத்தின் அழகு!

### தன்வினை வாக்கியம் – பிறவினை வாக்கியம்

தாய் குழந்தைக்கு உணவை ஊட்டினாள்.
தாய் குழந்தைக்கு உணவை உண்பித்தாள்.

### உடன்பாடு – எதிர்மறை

போட்டியில் சிலர்தான் வெற்றி பெற முடியும்.
போட்டியில் எல்லோரும் வெற்றி பெற முடியாது.

### செய்வினை – செயப்பாட்டு வினை

திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினார்.
திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

## நேர்க்கூற்று – அயற்கூற்று

ஆசிரியர் முருகனைப் பார்த்து 'நீ நன்றாகப் படிக்க வேண்டும்' என்று கூறினார்.

ஆசிரியர் முருகனிடம் நன்றாகப் படிக்கும்படிக் கூறினார்.

## வாக்கிய மாற்றம்

வாக்கியங்களின் அமைப்பை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம் என்பவை.

1. **தனி வாக்கியம் :** எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருளும் அமைவது தனி வாக்கியம். (எ.டு) கம்பர் இராமகாதையை இயற்றினார்.

2. **தொடர் வாக்கியம் :** ஓர் எழுவாய் பல பயனிலைகளைப் பெற்றுத் தொடர்பு கொண்டு வருவது தொடர் வாக்கியமாகும்.

   ஔவையார் அதியமானிடம் சென்றார்; அவன் தந்த உணவை உண்டார்; களைப்பு நீங்கினார்; அவனை வாழ்த்தினார்; பின்பு அவனிடமே தங்கி விட்டார். இது தொடர் வாக்கியம். இவ் வாக்கியத்தில் ஐந்து தனி வாக்கியங்கள் உள்ளன. ஔவையார் என்னும் எழுவாயை ஒவ்வொரு வினைமுற்றின் முன்னும் சேர்த்தால், ஐந்து தனி வாக்கியங்கள் அமைந்து விடும்.

3. **கலவை வாக்கியம் :** ஒரு முதன்மை வாக்கியம், ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்களுடன் கலந்து இயைந்துவரின், அது கலவை வாக்கியமாகும். நாடு முன்னேற வேண்டுமெனில், நமது கடமையை நாம் ஒழுங்காகச் செய்து வரல் வேண்டும் – இது கலவை வாக்கியம்.

## தன்வினை, பிறவினை

ஒருவன் தானே செய்யும் செயலைக் குறிப்பது தன்வினை எனப்படும் .

(எ.டு.) அமர்ந்தான்.

ஒருவன் பிறரைக் கொண்டு நிகழ்த்தும் செயல் பிறவினை எனப்படும்.

(எ.டு.) அமர்த்தினான்.

1. தன் வினையிலுள்ள மெல்லின எழுத்துக்களை வல்லினமாக மாற்றித் தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்றலாம்.
   நீங்கு – நீக்கு, அடங்கு – அடக்கு

2. தன்வினைப் பகுதியிலுள்ள வல்லின மெய்களை இரட்டித்துத் தன் வினைகளைப் பிறவினைகளாக மாற்றலாம்.

3. தன்வினைப் பகுதிகளோடு 'து' விகுதியைச் சேர்த்துத் தன்வினைகளைப் பிறவினைகளாக ஆக்கலாம். நட – நடத்து

## காரணவினை

ஒரு வினையைக் காரண வினையாக மாற்ற வி, பி. என்ற விகுதியைச் சேர்க்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| பயின்றான் | பயில் | செய்தான் | செய் |
| பயில்வித்தான் | பயில்வி | செய்வித்தான் | செய்வி |
| கற்றான் | கல் | நடந்தான் | நட |
| கற்பித்தான் | கற்பி | நடப்பித்தான் | நடப்பி |

## செய்வினை – செயப்பாட்டு வினை

பாரதியார் பாட்டைப் பாடினார் – இது செய்வினை வாக்கியம்.

பாட்டு பாரதியாரால் பாடப்பட்டது–இது செயப்பாட்டு வினை வாக்கியம்.

"பாடினார்" என்பது செய்வினை. "பாடப்பட்டது" என்பது செயப்பாட்டு வினை. செய்வினைக்கு செய்பவன் எழுவாயாக வரும். செயப்படுபொருள் உண்டு. செயப்பாட்டு வினைக்குச் செய்பவன் எழுவாயாக வாராது. செயப்படு பொருளும் இல்லை.

## உடன்பாடு – எதிர்மறை

| உடன்பாட்டு வாக்கியம் | | எதிர்மறை வாக்கியம் |
|---|---|---|
| நான் வந்தேன் | – | நான் வந்திலேன் |
| நான் வருகிறேன் | – | நான் வருகின்றிலேன். |
| நான் வருவேன் | – | நான் வாரேன். |

இவற்றுள் 'வந்தேன், வருகிறேன், வருவேன்' என்பதை 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு' என்னும் முக்கால நிகழ்ச்சிகளைப் பற்றி உணர்த்துவதால், அவை உடன்பாட்டு வினைகளாம். 'வந்திலேன், வருகின்றிலேன், வாரேன்' என்பவை நிகழாதவற்றை உணர்த்துவதால் அவை எதிர்மறை வினைகளாம்.

## நேர்க்கூற்று – அயற்கூற்று

ஆசிரியர், 'முருகா, உன் பாடநூலை எடுத்து வா,' என்று கூறினார். இது நேராக முருகனைப் பார்த்து ஆசிரியர் கூறுவதால் இதனை நேர்க்கூற்று என்பர்.

ஆசிரியர் முருகனை அவனது பாடநூலை எடுத்து வருமாறு கூறினார் இது அயற்கூற்று.

நேர்க்கூற்றை அயற்கூற்றாகவோ, அயற்கூற்றை நேர்க்கூற்றாகவோ, மாற்றுவதற்கு ஆங்காங்கே வரும் கூற்று வகைகட்கு ஏற்ப மாற்ற வேண்டும். இக்கூற்று வகைகளில் வினா, விடை, ஆணை, வேண்டுகோள், சொல்லுதல், உரைத்தல், விளக்குதல், விளம்புதல், முதலிய பல வினை முடிவுகளை இடத்திற்கு ஏற்பக் கையாள வேண்டும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்...

# TNPSC வினாத்தாள் 16

SSLC Std.

## பொதுத் தமிழ்

**1. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க. "மாமலையின் குகை போன்றிருப்பது சாகசச் செய்திகள்".**

A. மாமலையின் குகை போன்றிருப்பது ஏன்?
B. மாமலையின் குகை போன்றிருப்பது எது?
C. மாமலையின் குகை போன்றிருப்பது சாகசச் செய்திகளா?
D. மாமலையின் குகை போன்றிருப்பது எங்ஙனம்?

**2. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரைத் தேர்க.**

A. மாதம் கழித்து தெனாலிராமன் ஒரு அரசனிடம் சென்றான்.
B. ஒரு மாதம் கழித்து சென்றான் அரசனிடம் தெனாலிராமன்
C. ஒரு மாதம் கழித்து தெனாலிராமன் அரசனிடம் சென்றான்.
D. தெனாலிராமன் அரசனிடம் சென்றான். ஒரு மாதம் கழித்து

**3. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரைத் தேர்க.**

A. சேர நாடு செந்தமிழ் வளர்த்த நாடு பத்தொன்பதாம் நூற்றாண்டில்
B. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சேர நாடு வளர்த்த நாடு செந்தமிழ்
C. சேர நாடு பத்தொன்பதாம் நூற்றாண்டில் செந்தமிழ் வளர்த்த நாடு
D. பத்தொன்பதாம் நூற்றாண்டில் செந்தமிழ் வளர்த்த நாடு சேர நாடு

**4. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரைத் தேர்க.**

A. நீதிநெறி தவறாமல் செங்கோல் செலுத்தினான் விக்கிரமாதித்தன்
B. நீதிநெறி தவறாமல் விக்கிரமாதித்தன் செலுத்தினான் செங்கோல்
C. விக்கிரமாதித்தன் நீதிநெறி தவறாமல் செங்கோல் செலுத்தினான்
D. விக்கிரமாதித்தன் செங்கோல் செலுத்தினான் நீதிநெறி தவறாமல்

**5. வேர்ச்சொல்லை தேர்வு செய்க. "ஈன்றாள்"**

A. ஈன்று
B. ஈன்ற
C. ஈன்றனன்
D. ஈன்றனர்

**6. "கொண்டான்" என்பதன் வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.**

A. கொண்
B. கொள்
C. கொண்டு
D. கொண்டனன்

**7. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. "குரைத்தது"**

A. குரையும்
B. குரைத்த
C. குரைத்து
D. குரை

**8. "கற்றார்" எதிர்ச்சொல் தருக.**

A. கற்ற
B. கற்பார்
C. கற்பவர்
D. கல்லாதவர்

**9. "வசை" எதிர்ச்சொல் தருக.**

A. இசை
B. தசை
C. பசை
D. இன்பம்

**10. "பொய்யாமை" எதிர்ச்சொல் தருக.**

A. பொய்
B. பொய்மை
C. வாய்மை
D. இல்லாமை

**11. எதிர்ச்சொல் தருக. "பருத்தல்"**

A. உருத்தல்
B. உயரமாதல்
C. பெருத்தல்
D. சிறுத்தல்

**12. பொருத்துக.**

1. பூசல் — அ. உயர்வு
2. இளவல் — ஆ. விருப்பம்
3. வேட்கை — இ. தம்பி
4. மேம்பாடு — ஈ. சண்டை

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | அ | ஆ | இ | ஈ |
| B. | ஈ | இ | ஆ | அ |
| C. | இ | ஈ | அ | ஆ |
| D. | ஈ | இ | அ | ஆ |

**13. பொருத்துக.**

1. இதுகாறும் — அ. எருது
2. வளம் — ஆ. இதுவரை
3. காளை — இ. விருட்சம்
4. மரம் — ஈ. செழிப்பு

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | ஆ | ஈ | இ | அ |
| B. | ஈ | அ | ஆ | இ |
| C. | ஆ | ஈ | அ | இ |
| D. | அ | ஆ | இ | ஈ |

**14. பொருத்துக.**

1. பாவித்தல் — அ. வரையறை
2. எல்லை — ஆ. கருதுதல்
3. பாலம் — இ. விலங்கு
4. தளை — ஈ. வாராவதி

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | அ | ஆ | இ | ஈ |
| B. | இ | ஆ | ஈ | அ |
| C. | ஆ | அ | இ | ஈ |
| D. | ஆ | அ | ஈ | இ |

**15. "கடன்பட்டார் நெஞ்சம்போல்" உவமைக்கேற்ற பொருள் தேர்க.**

A. கலங்கியது C. இன்பம்
B. தவிப்பு D. ஏமாற்றம்

**16. "ஓலையில் எழுதிய எழுத்துப் போல்" – உவமைக்கேற்ற பொருள் தேர்க.**

A. உறுதியானது C. ஒடிந்தது
B. அழிந்தது D. தெளிவானது

**17. "வேம்பும் அரசும் போல" உவமைக்கேற்ற பொருள் தேர்க.**

A. ஒற்றுமை C. ஒரே சீராக
B. பகை D. உறுதி

**18. "அவலை நினைத்து உரலை இடித்தாற் போல" உவமைக்கேற்ற பொருளைத் தேர்க.**

A. விலகுதல் C. பெருமை
B. கவனம் D. ஒற்றுமை

**19. "அறி" என்ற வேர்ச்சொல்லின் வினைத்தொகை தேர்க.**

A. அறிந்தனன் C. அறிமரபு
B. அறிந்த D. அறிந்து

**20. "எண்" என்ற வேர்ச்சொல்லின் முற்றெச்சம் எவை?**

A. எண்ணா C. எண்ணினார்
B. எண்ணினான் D. எண்ணார்

**21. "பொய்" என்ற வேர்ச்சொல்லின் எதிர்மறை வினையெச்சம் எது?**

A. பொய்யாது C. பொய்யா
B. பொய்யாமை D. பொய்யாகி

**22. "உயர்" என்ற வேர்ச்சொல்லின் வினையாலனையும் பெயர் தேர்க.**

A. உயர்ந்த C. உயர்ந்தோர்
B. உயர்திலன் D. உயர்ந்தோன்

**23. ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளைத் தேர்க. "ஆ"**

A. ஆயுள் C. ஆச்சர்யம்
B. ஆசை D. ஆன்மா

**24. "கு" ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளை தேர்க.**

A. பூமி C. காற்று
B. வானம் D. நெருப்பு

**25. "த" ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளைத் தேர்க.**

A. இந்திரன் C. இராவணன்
B. குபேரன் D. இராமன்

**26. "தை" ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருள் தேர்க.**

A. மகரராசி C. மேஷ ராசி
B. கன்னிராசி D. கும்ப ராசி

**27. சந்தி பிழையற்ற தொடர் தேர்க.**

A. "தம்பீ பாய்புலியை பார்" என்று கந்தன் தன் தம்பிக்கு கூறினான்.

B. "தம்பீ பாய்புலியைப் பார்" என்று கந்தன் தன் தம்பிக்குக் கூறினான்.

C. "தம்பீப் பாய்புலியைப் பார்" என்றுக் கந்தன் தன் தம்பிக்குக் கூறினான்.

D. "தம்பீப் பாய்ப்புலியைப் பார்" என்றுக் கந்தன் தன் தம்பிக்குக் கூறினான்.

**28. சந்தி பிழை அற்ற தொடர் தேர்க.**

A. வந்த பையன் சொன்னச் செய்தி கேட்ட தாத்தாக் கலங்கினார்.

B. வந்தப் பையன் சொன்ன செய்திக் கேட்ட தாத்தா கலங்கினார்

C. வந்த பையன் சொன்ன செய்தி கேட்ட தாத்தா கலங்கினார்

D. வந்தப் பையன் சொன்னச் செய்திக் கேட்ட தாத்தாக் கலங்கினார்.

**29. சந்தி பிழையற்ற தொடரைத் தேர்க.**

A. இப்படி சொன்னால் எப்படிப் புரியும் எனத் தெரியவில்லை

B. இப்படி சொன்னால் எப்படி புரியும் என தெரியவில்லை

C. இப்படிச் சொன்னால் எப்படி புரியும் எனத் தெரியவில்லை
D. இப்படிச் சொன்னால் எப்படிப் புரியும் எனத் தெரியவில்லை

**30. "ஒழிவிலொடுக்கம்" என்ற நூலின் ஆசிரியர்**

A. இராமலிங்க அடிகளார்
B. திருத்தக்க தேவர்
C. சேக்கிழார்
D. கண்ணதாசன்

**31. "வேதாரணிய புராணம்" என்ற நூலின் ஆசிரியர்**

A. மாணிக்கவாசகர்
B. தெய்வப்புலவர்
C. பரஞ்சோதி முனிவர்
D. இளங்கோவடிகள்

**32. "காமஞ்சரி" என்ற நூலின் ஆசிரியர்**

A. காந்தியடிகள்
B. குமாரன் ஆசான்
C. கண்ணதாசன்
D. புலவர் குழந்தை

**33. வாக்கிய வகையினை அறிக. "தஞ்சையில் உலகத்தமிழ் மாநாடு சிறப்புற நடைபெற்றது".**

A. செய்தி வாக்கியம்
B. செய்வினை வாக்கியம்
C. நேர்க்கூற்று வாக்கியம்
D. தொடர் வாக்கியம்

**34. எவ்வகை வாக்கியம் எனக் கண்டு எழுதுக. "மக்கள் காந்தியடிகளைப் போற்றுகின்றனர்".**

A. செயப்பாட்டு வாக்கியம்
B. பிறவினை வாக்கியம்
C. அயற்கூற்று வாக்கியம்
D. செய்வினை வாக்கியம்

**35. வாக்கிய வகையினை அறிக. "பாண்டியன் அயராது உழைத்தான்; அதனால் வெற்றி பெற்றான்".**

A. கலவை வாக்கியம்
B. தொடர் வாக்கியம்
C. உடன்பாட்டு வாக்கியம்
D. பிறவினை வாக்கியம்

**36. செய்வினை வாக்கியம் எது என அறிக.**

A. தேம்பாவணி வீரமாமுனிவரால் இயற்றப் பட்டது
B. வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றினார்
C. வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றிலர்
D. தேம்பாவணியை வீரமாமுனிவர் இயற்றினார்

**37. விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுக்க. "நீதி நெறியில் தவறாமல் நிற்க வேண்டும்".**

A. நீதிநெறியில் தவறாமல் நிற்க வேண்டுமா?
B. எந்நெறியில் தவறாமல் நிற்க வேண்டும்?
C. தவறாமல் எந்நெறியில் நிற்க வேண்டும்?
D. தவறாமல் நிற்கவேண்டும் எந்நெறியில்?

**38. சொல்லின் வகை அறிக. "மருக்கொழுந்து நட்டனர்"**

A. தொழிலாகு பெயர்
B. பண்பாகு பெயர்
C. பொருளாகு பெயர்
D. காலவாகு பெயர்

**39. சொல்லின் வகை அறிக. "உலகம் புகழும்"**

A. காலப்பெயர்
B. இடப்பெயர்
C. குணப்பெயர்
D. சினைப்பெயர்

**40. சொல்லின் வகை அறிக. "ஆசிரியர் தலைக்கு ஒரு வினாத்தாள் தந்தார்".**

A. சினையாகு பெயர்
B. பண்பாகு பெயர்
C. காலவாகு பெயர்
D. தொழிலாகு பெயர்

**41. சொல்லின் வகை அறிக. "மணிமொழி மார்கழி சூடினாள்"**

A. பொருட்பெயர்
B. காலப்பெயர்
C. தொழிற்பெயர்
D. சினைப்பெயர்

**42. சொல்லின் வகை அறிக. "கண்ணன் அவியல் உண்டான்"**

A. தொழிற்பெயர்
B. பொருட்பெயர்
C. காலப்பெயர்
D. குணப்பெயர்

**43. "ஏத்துதல்" என்பதின் வேர்ச்சொல் தருக.**

A. ஏத்தி
B. ஏத்தும்
C. ஏத்தினான்
D. ஏத்து

**44. "மெலிந்தான்" என்பதின் வேர்ச்சொல் அறிக.**

A. மெலிந்த
B. மெலிந்து
C. மெலி
D. மெலிந்தாள்

**45. வேர்ச்சொல் அறிக. "மன்றாடினான்"**

A. மன்றாடி
B. மன்றாடு
C. மன்றாடிய
D. மன்றாடினாள்

**46. மரபு பிழையற்ற தொடரை அறிக.**

A. விடியற்காலை கோழி அகவ குயில் கரைய காகம் கத்தியது.
B. விடியற்காலை கோழி கொக்கரிக்க குயில் அகவ காகம் கரைந்தது.

C. விடியற்காலை கோழி கொக்கரிக்கக் குயில் கூவக் காகம் கரைந்தது.

D. விடியற்காலை கோழி அகவ குயில் கூவக் காகம் கரைந்தது

**47. மரபு பிழையற்ற தொடரைத் தேர்க.**

A. தோட்டத்தில் வாழைச்செடியும், தென்னங்கன்னும் நட்டாங்க

B. தோட்டத்தில் வாழைக்கன்றும், தென்னங்கன்றும் நட்டார்கள்

C. தோட்டத்தில் வாழைகன்றும் தென்னம்பிள்ளையும் நட்டார்கள்

D. தோட்டத்தில் வாழைக்கன்றும் தென்னை செடியும் நட்டார்கள்

**48. மரபு பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.**

A. காட்டில் யானை கத்தியது; நரி கூவியது; புலி சத்தமிட்டது

B. காட்டில் யானை பிளிறியது; நரி கத்தியது; புலி கர்ஜித்தது

C. காட்டில் யானை உறுமியது; நரி சத்தமிட்டது; புலி கத்தியது

D. காட்டில் யானை பிளிறியது; நரி ஊளையிட்டது; புலி உறுமியது

**49. மரபு பிழையற்ற தொடரைத் தேர்க.**

A. தாள் இயற்று C. தாள் அடி

B. தாள் எழுது D. தாள் வரை

**50. பொருந்தாச் சொல்லை தேர்க.**

A. தெப்பம் C. புனை

B. படகு D. கப்பல்

**51. பொருந்தாச் சொல்லை அறிக.**

A. அசதி C. புத்துணர்ச்சி

B. சோர்வு D. களைப்பு

**52. பொருந்தாச் சொல்லை தேர்வு செய்க.**

A. நேசம் C. பாசம்

B. அன்பு D. பரிவு

**53. பொருந்தாச் சொல்லை தேர்ந்தெடுக்க.**

A. மரை C. அல்லி

B. கமலம் D. தாமரை

**54. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. பாரதி செந்தமிழ் | அ. தேர்ப்பாகன் |
| 2. பாரதி சிந்துக்கு | ஆ. அறிஞன் |
| 3. பாரதி பைந்தமிழ் | இ. தேனீ |
| 4. பாரதி அறம் பாடவந்த | ஈ. தந்தை |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | அ | ஆ | இ | ஈ |
| B. | இ | ஈ | அ | ஆ |
| C. | ஆ | அ | ஈ | இ |
| D. | ஈ | இ | ஆ | அ |

**55. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. உதிரம் | அ. வானம் |
| 2. படியில் | ஆ. இரத்தம் |
| 3. புலமை | இ. பூமியில் |
| 4. மானம் | ஈ. அறிவு |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | ஈ | அ | இ | ஆ |
| B. | இ | ஆ | அ | ஈ |
| C. | அ | ஈ | ஆ | இ |
| D. | ஆ | இ | ஈ | அ |

**56. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. அமரர் | அ. தன்மை |
| 2. ஏறு | ஆ. உறவினர் |
| 3. இயல்பு | இ. தேவர் |
| 4. கேளிர் | ஈ. தலைவன் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A. | இ | ஈ | அ | ஆ |
| B. | ஈ | ஆ | இ | அ |
| C. | அ | இ | ஆ | ஈ |
| D. | ஆ | அ | ஈ | இ |

**57. அடி எதுகையை காண்க.**
**“அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள”.**

A. அருட்செல்வம் – பொருட்செல்வம்

B. செல்வம் – செல்வம்

C. அருட்செல்வம் – செல்வம்

D. அருட்செல்வம் – பூரியார்

**58. “பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடைய யான்கண் படின்”-இதில் அமைந்துள்ள மோனை**

A. பொழிப்பு மோனை C. இணை மோனை

B. ஒரூஉ மோனை D. அடி மோனை

**59. “அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி” - இதில் அமைந்துள்ள மோனை குறி ப்பிடுக.**

A. மேற்கதுவாய் மோனை

B. கூழை மோனை

C. கீழ்க்கதுவாய் மோனை

D. ஒரூஉ மோனை

**60. “மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்” - இதில் அமைந்துள்ள எதுகை**

A. ஒரூஉ எதுகை
B. பொழிப்பு எதுகை
C. இணை எதுகை
D. அடியெதுகை

**61. “அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்” - இதில் அமைந்துள்ள எதுகை**

A. பொழிப்பெதுகை
C. கூழை எதுகை
B. ஒரூஉ எதுகை
D. முற்றெதுகை

**62. இலக்கண குறிப்பு தருக. “உலர்பாலை”**

A. வியங்கோள் வினைமுற்று
B. உரிச்சொல் தொடர்
C. வினைத்தொகை
D. உவமையாகுபெயர்

**63. இலக்கண குறிப்பு தேர்வு செய்க. “புணரா”**

A. தொழிற்பெயர்
B. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
C. பெயரெச்சம்
D. உரிச்சொல் தொடர்

**64. “கடப்பாடு” இலக்கண குறிப்பு காண்க.**

A. தொழிற்பெயர்
B. இடைக்குறை
C. வியங்கோள் வினைமுற்று
D. பெயரெச்சம்

**65. “வைக்கப்படும்” இலக்கண குறிப்பு அறிக.**

A. வினையெச்சம்
B. வியங்கோள் வினைமுற்று
C. எண்ணும்மை
D. உம்மைத்தொகை

**66. “பெறாஅ” - இலக்கணக் குறிப்பு தேர்வு செய்க.**

A. செய்யுளிசையளபெடை
B. இன்னிசையளபெடை
C. சொல்லிசையளபெடை
D. இசைநிறையளபெடை

**67. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**

A. ஆன்மா, இடுக்கி, எள், அச்சம்
B. இடுக்கி, எள், அச்சம், ஆன்மா
C. அச்சம், ஆன்மா, இடுக்கி, எள்
D. எள், அச்சம், ஆன்மா, இடுக்கி

**68. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**

A. தமிழ், தந்தி, தயிர், தங்கம்
B. தயிர், தங்கம், தந்தி, தமிழ்
C. தங்கம், தயிர், தமிழ், தந்தி
D. தங்கம், தந்தி, தமிழ், தயிர்

**69. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**

A. சாயம், சாவி, சாதம், சாலை
B. சாதம், சாயம், சாலை, சாவி
C. சாலை, சாதம், சாயம், சாவி
D. சாவி, சாலை, சாதம், சாயம்

**70. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**

A. வல்லவர், நல்லவர், சிறந்தவர், கற்றவர்
B. கற்றவர், சிறந்தவர், நல்லவர், வல்லவர்
C. சிறந்தவர், வல்லவர், கற்றவர், நல்லவர்
D. நல்லவர், கற்றவர், வல்லவர், சிறந்தவர்

**71. ஒருமை, பன்மை பிழையற்ற தொடர் தேர்க.**

A. கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடியது
B. கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடினார்கள்
C. கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடினர்
D. கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடினாள்

**72. ஒருமை, பன்மை பிழையற்ற தொடர் காண்க.**

A. அதுகள் இங்கே உள்ளது
B. அது இங்கே உள்ளன
C. அவை இங்கே உள்ளன
D. அவை இங்கே உள்ளார்கள்

**73. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் தேர்க.**

A. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தது
B. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தன
C. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தார்கள்
D. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தனர்

**74. பிறமொழிச் சொற்களை நீக்கிய தொடரைக் காண்க.**

A. என் ஏகபுத்திரனின் ஜானவாசத்திற்குச் சகலரும் வரணும்
B. என் ஒரே மகனின் ஜானவாசத்திற்கு எல்லோரும் வரவேண்டும்
C. என் ஒரே மகனின் ஊர்வலத்திற்கு எல்லோரும் வருதல் வேண்டும்
D. என் ஒரே மகனின் ஊர்வலத்திற்கு அனைவரும் வருதல் வேண்டும்

**75. பிறமொழிச் சொற்கள் நீக்கிய தொடரை அறிக.**

A. அவ்வாளை எல்லாம் அகத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து பருக தண்ணீர் கொடு.
B. அவர்களை எல்லாம் ஆத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து பருக தீர்த்தம் கொடு

C. அவர்களையெல்லாம் அகத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து பருகத் தண்ணீர் கொடு
D. அவர்களை எல்லாம் ஆத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து அருந்த தண்ணீர் கொடு

**76. பிறமொழிச் சொற்கள் நீங்கிய தொடரை அறிக.**

A. பந்துமித்திரர் நண்பர்களுடன் வந்து ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.
B. உறவினர் நண்பர்களுடன் வந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.
C. பந்துமித்திரர் சகிதம் வந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.
D. உறவினர் சகிதம் வந்து ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.

**77. எவ்வகை வாக்கியம் எனக் கண்டு எழுதுக. “இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தை இ யற்றினார்”**

A. தனி வாக்கியம்
B. விழைவு வாக்கியம்
C. செய்தி வாக்கியம்
D. செயப்பாட்டு வாக்கியம்

**78. வாக்கிய வகையினைக் குறிப்பிடுக. “என்ன விலை?”.**

A. உணர்ச்சி வாக்கியம்
B. வினா வாக்கியம்
C. கட்டளை வாக்கியம்
D. எச்ச வினை

**79. பின்வரும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் எனக் கூறுக. “கந்தன் படித்தான்”.**

A. தனி வாக்கியம்
B. செய்தி வாக்கியம்
C. பிறவினை வாக்கியம்
D. செய்வினை வாக்கியம்

**80. பின்வரும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் எனக் கூறுக. “நாம் வாழ்வில் முன்னேற வேண்டும்” என்று ஆசிரியர் எங்களுக்கு அறிவுரை கூறினார்.**

A. தொடர் வாக்கியம்
B. கலவை வாக்கியம்
C. செய்தி வாக்கியம்
D. தனி வாக்கியம்

**81. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் அறிக. "Stationary Shop" - ஸ்டேஷனரி ஷாப்**

A. எழுதுபொருள் அங்காடி
B. புத்தகக் கடை
C. அனைத்து பொருள் அங்காடி
D. பல்பொருள் அங்காடி

**82. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்க. “கம்பெனி” ஆரம்பித்தேன்.**

A. தொழிலகம்
B. பிஸ்னஸ்
C. குழுமம்
D. வியாபாரம்

**83. “பிரிண்டிங் பிரஸ்” - தமிழ்ச்சொல் தருக.**

A. பதிவு நிலையம்
B. நகலகம்
C. பிரிண்டிங் நிலையம்
D. அச்சகம்

**84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்க. "Wakeful" - வேக்ஃபுல்**

A. சுறுசுறுப்பான
B. தூக்கமில்லாத
C. உற்சாகமான
D. வியப்பான

**85. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தேர்க. "Safeguard" - சேஃப் கார்ட்**

A. துணைவன்
B. உதவியாளர்
C. காவலன்
D. பாதுகாப்பாளி

**86. “சிந்துக்குத் தந்தை” என்று அழைக்கப்படுபவர்**

A. அண்ணாமலை ரெட்டியார்
B. வ.உ.சிதம்பரனார்
C. பாரதிதாசன்
D. ஈ.வெ.ராமசாமி

**87. “முத்தமிழ்க் காவலர்” என்று அழைக்கப்படுபவர்**

A. வாணிதாசன்
B. திரு.வி.கல்யாணசுந்தரனார்
C. கி.ஆ.பெ.விசுவநாதம்
D. ஜெயகாந்தன்

**88. “மொழி ஞாயிறு” என்று அழைக்கப்படுபவர்**

A. நச்சினார்கினியர்
B. தேவநேயப் பாவணர்
C. கலைஞர் கருணாநிதி
D. சோமசுந்தர பாரதியார்

**89. ஒலி வேறுபாடறிந்த சரியான பொருள் தேர்க.**

| | கலம் | களம் | காளை |
|---|---|---|---|
| A. | வளையல் | போர்க்களம் | நாளின் முற்பகுதி |
| B. | வாகனம் | வழி | விடியல் |
| C. | விண்கலம் | மரக்கலம் | வீரம் |
| D. | கப்பல் | இடம் | எருது |

**90. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் தருக.**

| | விரல் | விறல் | வருத்தல் |
|---|---|---|---|
| A. | நகம்விறகு | காய்கறிகளை வறுத்தல் | |
| B. | கைவிரல் | வெற்றி | துன்புறுத்தல் |
| C. | உறுப்பு | மீன் | மனவருத்தம் |
| D. | கை விற்றல் | துன்பம் | |

**91. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக.**

| | திரை | திறை | நிரை |
|---|---|---|---|
| A. | அலை | கப்பம் | வரிசை |
| B. | கடல் வரி | நிறைத்து | வைத்தல் |
| C. | வெண்திரை | அரசிறை | ஒழுங்கு |
| D. | மறைத்தல் | கூறுபாடு | படைவகுப்பு |

**92. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக.**

| | எரி | எறி | ஏரி |
|---|---|---|---|
| A. | எரித்தல் | குத்து | நரகம் |
| B. | மிகுதி | அறை | குளம் |
| C. | நெருப்பு | எறிதல் | மேலே ஏறி |
| D. | தீ | வீசு | நீர்நிலை |

**93. ஒலி வேறுபாடு அறிந்து சரியானவற்றைத் தேர்க. மழையினால் .... பெருகியது.**

A. வெல்லம் C. வெளம்
B. வெள்ளம் D. வேலம்

**94. அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல் : "வஞ்சி நெடும்பாட்டு" என்றழைக்கப்படும் நூல்**

A. பட்டினப்பாலை C. அகநானூறு
B. கலித்தொகை D. முல்லைப்பாட்டு

**95. பிரித்தெழுதுக. "நாண்மதி"**

A. நாள் + மதி C. நாண் + மதி
B. நான்கு + மதி D. நன்மை + மதி

**96. சரியாகப் பிரித்தெழுதப் பெற்ற விடைக்குரிய குறியை எழுதுக. "பொற்குற்ற வேணி"**

A. பொற்குற்ற + வேணி
B. பொன் + அற்ற + வேணி
C. பொன் + குற்ற + வேணி
D. பொருள் + குற்ற + வேணி

**97. பிரித்து எழுதுதல் : "பேருரம்"**

A. பெருமை + உரம் C. பெரு + உரம்
B. பேர் + உரம் D. பே + உரு + அம்

**98. பிரித்தெழுதுக. "அற்குற்ற குழல்"**

A. அற்குற்ற + குழல்
B. அல் + உற்ற + குழல்
C. அருமை + உற்ற + குழல்
D. அல் + குற்ற + குழல்

**99. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க. "நூல் பல கல் என்பது ஔவையாரின் அமுதமொழி".**

A. ஔவையாரின் அமுதமொழி என்பது?
B. நூல் பல கல் என்பது?
C. எதை ஔவையாரின் அமுதமொழி என்கிறோம்?
D. நூல் பல கல் ஔவையாரின் அமுத மொழியா?

**100. சினை பெயரைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

A. பேசுதல், பார்த்தல்
B. நல்லவன், கெட்டவன்
C. பூ, கனி
D. ஞாயிறு, திங்கள்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 B | 2 C | 3 D | 4 C | 5 A | 6 B | 7 D | 8 D | 9 A | 10 C |
| 11 D | 12 B | 13 C | 14 D | 15 A | 16 B | 17 A | 18 B | 19 C | 20 D |
| 21 A | 22 C | 23 D | 24 A | 25 B | 26 A | 27 B | 28 C | 29 D | 30 A |
| 31 C | 32 D | 33 A | 34 D | 35 B | 36 B | 37 B | 38 C | 39 B | 40 A |
| 41 B | 42 A | 43 D | 44 C | 45 B | 46 C | 47 C | 48 D | 49 C | 50 D |
| 51 C | 52 D | 53 C | 54 B | 55 D | 56 A | 57 D | 58 A | 59 C | 60 B |
| 61 B | 62 C | 63 B | 64 A | 65 B | 66 D | 67 C | 68 D | 69 B | 70 B |
| 71 D | 72 C | 73 B | 74 D | 75 C | 76 B | 77 C | 78 B | 79 A | 80 B |
| 81 A | 82 C | 83 D | 84 B | 85 D | 86 A | 87 C | 88 B | 89 D | 90 B |
| 91 A | 92 D | 93 B | 94 A | 95 A | 96 C | 97 A | 98 D | 99 B | 100 C |

# TNPSC வினாத்தாள் 17

SSLC Std.

## பொது அறிவு

1. **காங்கிரஸ் பிளவை ஏற்படுத்திய மாநாடு**
   A. லாகூர் C. திரிபுரா
   B. சூரத் D. மதராஸ்

2. **இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ள முதல் பெண்**
   A. சோகிலா ஐயர் C. உமாபாரதி
   B. கிரன்பேடி D. சுஷ்மா சாவ்லா

3. **பின் வருவனவற்றில் எந்த இடம் மஹாயான போதிப்பிற்கு புகழ் பெற்றது?**
   A. நாலந்தா C. வாரனாசி
   B. தட்சசீலம் D. சாரநாத்

4. **பின்வருவனவற்றில் எது சோழ நிர்வாகத்தில் அடிமட்ட பிரிவு-**
   A. மண்டலம் C. குர்ரம்
   B. கோட்டம் D. வளநாடு

5. **கீழ்வருவனவற்றில் எந்த நாடு ஐக்கிய நாட்டு அமைப்பில் பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்தினராக இல்லை?**
   A. அமெரிக்கா C. ஜெர்மனி
   B. ரஷ்யா D. பிரான்சு

6. **இந்திய அரசியலமைப்பின் திட்டக் குறிப்பு ஆலோசனை சபையின் தலைவர்-**
   A. ராஜேந்திர பிரசாத்
   B. தேஜ் பகதூர் சப்ரூ
   C. சி. ராஜகோபாலாச்சாரி
   D. பி.ஆர். அம்பேத்கர்

7. **கீழ்கண்டவற்றில் பொருந்தாதது எது?**
   A. காசிரங்கா தேசீய பூங்கா - அசாம்
   B. கன்ஹா தேசீய பூங்கா - ஆந்திரப் பிரதேசம்
   C. முதுமலை சரணாலயம் - ஆந்திரப் பிரதேசம்
   D. டாச்சிகாம் சரணாலயம் - ஜம்மு & காஷ்மீர்

8. **ஒரு கருமையான நீல நிற பொருள் மஞ்சள் வெளிச்சத்தில் காணப்படுவது-**
   A. ஆரஞ்சு
   B. ஊதா நிறம்
   C. பழுப்பு நிறம்
   D. கருப்பு

9. **சில்லி பாயிண்ட் என்ற தொடர் எந்த விளையாட்டோடு தொடர்புடையது?**
   A. பில்லியர்ட்ஸ் C. சதுரங்கம்
   B. பிரிட்ஜ் D. கிரிக்கெட்

10. **அக்கவுஸ்டிக்ஸ் எந்த கல்வியின் ஒரு பிரிவு-**
   A. வரலாற்றுச் சின்னங்கள்
   B. கடல்பொருட்கள்
   C. ஒலி
   D. காற்று

11. **சூரியனின் உயரத்தைக் கண்டுபிடிக்க உதவும் கருவி-**
   A. பைரோமீட்டர்
   B. டெல்ஸ்டார்
   C. செக்ஸ்டான்ட்
   D. போட்டோமீட்டர்

12. **கலோரி என்ற அளவு குறிப்பது-**
   A. மின்சாரம் C. உஷ்ணம்
   B. விளக்கு D. ஒலி

13. **இந்தியாவில் முதல் தொலைகாட்சி மையம் நிறுவப்பட்ட இடம்-**
   A. மும்பை C. கோல்கத்தா
   B. டெல்லி D. ஆர்வி (புனே)

14. **தேசிய வருமானம் எதன் மூலம் கணக்கிடப் படுகிறது?**
   A. உற்பத்தி பொருள்முறை
   B. வருமான முறை
   C. செலவு முறை
   D. இவையனைத்தும்

15. **கதிரியக்க உலோகமான யுரேனியத்திற்குப் பெயரிட்டவர்-**
   A. சி.வி.ராமன் C. ஆட்டோ ஹான்
   B. கிளப்ராத் D. மாக்ஸ் பிளாங்க்

**16. ரத்த சிவப்பணுக்கள் உற்பத்தியாவது-**

A. மண்ணீரலில்
B. எலும்பு மஜ்ஜையில்
C. கல்லீரலில்
D. சிறுநீரகத்தில்

**17. இந்தியாவில் பெரிய கடற்கரை எல்லையைக் கொண்டுள்ள மாநிலம்-**

A. தமிழ்நாடு
B. கேரளா
C. குஜராத்
D. ஆந்திரப் பிரதேசம்

**18. ஆஸ்கார் விருது சம்பந்தப்பட்டது-**

A. திரைப்படம் C. அறிவியல்
B. இலக்கியம் D. விளையாட்டு

**19. சீனாவின் காகித நாணயம்-**

A. பிசோ C. யென்
B. லிரா D. யூவான்

**20. இந்திய அரசியலமைப்பில் 356 பிரிவு முக்கியமாக முடிவு செய்வது-**

A. அவசரநிலையை பிரகடனம் செய்வது
B. ஜனாதிபதி ஆட்சியை கொணர்வது
C. ஆளுநரை நியமிப்பது
D. மாநில வங்கி கணக்கை கட்டுப் படுத்துவது

**21. பின்வருவனவற்றில் ரொட்டி பவுடர் எனப் படுவது-**

A. சோடியம் கார்பனேட்
B. சோடியம் பைகார்பனேட்
C. கால்சியம் கார்பனேட்
D. கால்சியம் சல்பேட்

**22. பின்வருவனவற்றில் எது உலோகமல்ல?**

A. இரும்பு C. கதிரியக்கம்
B. தாமிரம் D. புரோமைன்

**23. மையோபியா என்ற கண் நோய் குறிப்பது-**

A. தூரத்து பார்வை குறைவது
B. நிறங்கள் பார்வைக்கு மங்கலாவது
C. மங்கலான வெளிச்சத்தில் பார்வையின்மை
D. நெருங்கிய பொருளின் பார்வை குறைதல்

**24. முதலாவது மறுமலர்ச்சி துவங்கிய நாடு-**

A. இங்கிலாந்து C. இத்தாலி
B. பிரான்சு D. ரஷ்யா

**25. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள்-**

A. ஆர்யபட்டா C. இன்சாட்-IIA
B. பாஸ்கரா D. பிரிதிவி

**26. பாரத் பவன் அமைந்துள்ள இடம்-**

A. போபால் C. கோல்கத்தா
B. புதுடெல்லி D. மும்பை

**27. பின்வருவனவற்றில் உரம் எது?**

A. பச்சை ஆல்கே
B. காம்போஸ்ட்
C. பொட்டாசியம் நைட்ரேட்
D. எதுவுமில்லை

**28. சிந்து நாகரீகத்தில் மிக உயர்ந்த தெளிவான விசேஷ அம்சம்-**

A. கடல் போக்குவரத்து
B. தொழிற்சாலைகள்
C. கிராமிய குடியிருப்பு
D. நகர அமைப்பு

**29. 'ஜாதி' என்ற தொடரை ஆரம்பித்தது யார்?**

A. இந்தியர்கள்
B. ஸ்பானிஷ்காரர்கள்
C. போர்த்துகீசியர்கள்
D. சீனர்கள்

**30. ரானிக்கட் நோய் தாக்குவது-**

A. நாய்கள்
B. பசுக்கள்
C. செம்மறியாடு
D. கோழி, வாத்து போன்ற பறவைகள்

**31. பெஸ்டிசைட்ஸ் எதனை அழிக்க உபயோகப் படுத்தப்படுவது?**

A. பூச்சிகள்
B. நுண்ணுயிர் ஜீவன்கள்
C. நச்சுத் தாவரங்கள்
D. மண்ணிலுள்ள நச்சுப் பொருள்கள்

**32. குளோரின் என்பது ஒரு-**

A. மருந்து C. ஹாலஜன்
B. கலப்பு உலோகம் D. கலவை

**33. மைக்கா உபயோகமாவது-**

A. கண்ணாடி
B. வெப்பத்தால் பாதிப்படையாத செங்கல்கள்
C. கலப்பு உலோகங்கள்
D. உலோகங்களை பிரிப்பது

**34. செங்கல்லைத் தண்ணீரில் போடும் போது நீர்க்குமிழி தெரிவதன் காரணம்-**

A. செங்கலிலுள்ள காற்று
B. தண்ணீரிலுள்ள காற்று
C. செங்கல்லினால் வெளியேற்றப்பட்ட நீர்
D. மேல்மட்டத்திலுள்ள இறுக்கத்தின் இயல்பு

**35. இரும்புச் சத்து மிகுதியாக உள்ளது எது?**

A. காலிஃபிளவர்
B. முட்டை
C. பால்
D. பச்சைக் காய்கறிகள்

**36. விளையாட்டு வீரருக்கு உடனடி சக்தியை அளிக்க உதவுவது-**

A. கார்போஹைட்ரேட்
B. புரதங்கள்
C. பாஸ்பேட்ஸ்
D. வைட்டமின்கள்

**37. எதிர்பாராமல் வெள்ளம் ஏற்படும் காலத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு..... லிருந்து தடுப்பு அளிக்க வேண்டியது அவசியம்.**

A. பெரியம்மை
C. காசநோய்
B. காலரா
D. போலியோ

**38. அந்தோதயா இயக்கத்தின் குறிக்கோள்-**

A. ஏழைகளிலும் ஏழைகளுக்கு உதவுவது
B. பொது வாழ்க்கையிலுள்ள லஞ்சத்தை எதிர்ப்பது
C. நலிந்தவர்களையும், வயதானவர் களையும் பராமரிப்பது
D. பங்களாதேசத்து அகதிகளைப் பராமரிப்பது.

**39. இந்தியாவில் மிக நகரமயமாக்கப்பட்ட மாநிலம்-**

A. பஞ்சாப்
C. மகாராஷ்டிரா
B. கேரளா
D. குஜராத்

**40. ‘வெள்ளை அறிக்கை’ (White Paper) என்ற தொடர் குறிப்பது-**

A. காகித நாணயத்தை அச்சடிக்கும் காகிதம்
B. அரசு ஒரு முக்கிய நிகழ்ச்சிக்கு தங்களுடைய கருத்தை கொடுக்கும் அறிக்கை
C. நேர்த்தியான தரத்தையுடைய காகிதம்
D. எழுத உதவும் சாதனங்கள் இருக்குமிடத்தில் உபயோகப்படுத்துவது

**41. பின்வருவனவற்றில் எது அடிப்படை உரிமையல்ல?**

A. சமத்துவ உரிமை
B. சுதந்திரமாக கருத்தை வெளியிடும் உரிமை
C. சுரண்டலை எதிர்க்கும் உரிமை
D. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை

**42. தோலில் ஊடுருவிச் சென்று மனித குடலில் செல்லும் புழு**

A. ஊசிப்புழு
C. வட்டப்புழு
B. கொக்கிப் புழு
D. நாடாப்புழு

**43. “Flame of Forest” என்ற தொடர் எதைக் குறிக்கிறது?**

A. காட்டில் அதிகமான தீ
B. அடங்காத கொடிய மிருகங்கள் கொண்ட காடு
C. இலையுதிர் காலத்தில் நிறைந்த பூக்களையுடைய செடிகளைக் கொண்ட காடு.
D. அதிகமாக உலர்ந்த புல், பூண்டுகளை உடைய காடு.

**44. கலப்புப் பொருளாதாரம் என்பது-**

A. தனியார் துறை, பொதுத் துறை இயங்குதல்
B. வேளாண்மை, தொழில் துறை
C. முதலாளியும், தொழிலாளர்களும் கொண்ட பிரிவு
D. முன்னேற்றமடைந்த பின்தங்கிய துறைகள் ஒரே காலத்தில் இருக்கிற நிலை

**45. டார்ச்சு மின்கலத்தில் ஒரு ஜதை டர்மினல்களில் அடங்கியது-**

A. பித்தளை-தாமிரம்
B. ஈயம் - கார்பன்
C. கார்பன் - தாமிரம்
D. பித்தளை - கார்பன்

**46. பாலில் கொழுப்புச் சத்து குறைவது-**

A. மழைக் காலத்தில்
B. கோடை காலத்தில்
C. குளிர் காலத்தில்
D. எதுவுமில்லை

**47. எல்லோருக்கும் பொருந்தக்கூடிய இரத்தவகை**

A. பிரிவு A
B. பிரிவு O
C. பிரிவு B
D. பிரிவு AB

**48. இந்திய அரசியலமைப்பில் எட்டாவது பிரிவின்படி அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்-**

A. 15
C. 14
B. 18
D. 16

**49. பாராளுமன்றத்தின் அங்கத்தினருக்கு தகுதியான வயது என்ன?**

A. 20
C. 30
B. 25
D. 35

**50. மதச்சார்பற்ற எனும் வார்த்தை எதை எடுத்துக்காட்டுகிறது?**

A. ஒருவன் கடவுளிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை
B. எல்லா மதங்களிலிருந்தும் அப்பாற் பட்டிருப்பது.
C. எல்லாக் குடிமக்களுக்கு மதமும், வணங்குவதற்கு சுதந்திரமும்.
D. பலவித மதங்களைப் பேணிக்காக்க.

**51. ரவீந்திரநாத் தாகூர் எப்போது Knight hood பட்டத்தைத் துறந்தார்?**

A. ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூட்டிற்கு பிறகு
B. காந்திஜியின் தண்டி யாத்திரைக்குப்பின்
C. சட்ட மறுப்பு இயக்கத்திற்கு பிறகு
D. எதுவுமில்லை.

**52. பணமசோதாவைப் பொறுத்தமட்டில் ராஜ்யசபையின் அதிகாரம்-**

A. நிராகரித்தல்
B. பரிந்துரை
C. திருத்துதல்
D. எதுவுமில்லை

**53. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ஒருமுறை-**

A. பற்றாக்குறையை மேற்கொள்ளுதல்
B. காகித நாணயத்தை அதிகமாக அச்சிடுவது
C. நாணய செலாவணியிலிருந்து நீக்குவது
D. எதுவுமில்லை

**54. உருவ வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட காலம்-**

A. இதிகாச காலம்
B. வேத காலம்
C. குப்தர்கள் காலம்
D. எதுவுமில்லை.

**55. பின்வருவனவற்றில் எது இந்து-ஆரிய மொழியல்ல.**

A. ஒரியா C. தமிழ்
B. மராத்தி D. சமஸ்கிருதம்

**56. மலட்டு எதிர்ப்புச் செயலுக்கு உதவும் வைட்டமின்-**

A. வைட்டமின் A
B. வைட்டமின் K
C. வைட்டமின் B
D. வைட்டமின் E

**57. மிருகங்களின் முதுகிலுள்ள கோடுகள் எதனைச் சுட்டிக் காட்டுகிறது?**

A. உணவு பழக்கங்களை
B. சேர்க்கை பழக்கங்களை
C. குகைவாசம்
D. தோலின் நிறம் சுற்றுப்புறத்தை ஒத்ததாக இருப்பது

**58. பசுக்களுக்கு பால்காய்ச்சல் வருவதன் காரணம் எதன் குறைவினால்?**

A. கால்சியம் C. இரும்பு
B. பாஸ்பேட் D. அயோடின்

**59. இந்தியாவின் மலைஜாதி மக்களின் அதிக சதவிகிதம் உள்ளவர்கள்-**

A. முண்டர்கள் C. சாந்தலர்கள்
B. நாகர்கள் D. பில்லர்கள்

**60. 15ம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த கப்பற்படை கொண்டிருந்த நாடு-**

A. பனாமா C. பராகுவே
B. போர்த்துகல் D. எதுவுமில்லை

**61. பொதுவுடைமைக் கருத்து எதன் மூலமாக ஆரம்பமாகிறது?**

A. தடையில்லா பொருளாதாரம்
B. கலப்புப் பொருளாதாரம்
C. பொதுத் துறை
D. இவை அனைத்தும்

**62. சூப்பர்சானிக் ஜெட் விமானங்களினால் விளைவது**

A. ஒலி மாசுபடுவதற்கு
B. ஓசோன் வாயு படலம் அழிவதற்கு
C. நரம்பு மண்டலம் பாதிப்பது
D. இவை அனைத்தும்

**63. இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவடைந்த யுத்தம்-**

A. பிளாசி யுத்தம் C. பக்ஸார் யுத்தம்
B. பானிபட் யுத்தம் D. வந்தவாசி யுத்தம்

**64. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற சொற்கள் தொடர்புடையது-**

A. பிரெஞ்சுப் புரட்சி C. ரஷ்யப் புரட்சி
B. அமெரிக்கப் புரட்சி D. எதுவுமில்லை

**65. அடிப்படை உரிமை இந்திய அரசியலமைப்பில் எந்த பிரிவில் அடங்கியுள்ளது?**

A. பிரிவு - 1 C. பிரிவு - 4
B. பிரிவு - 3 D. பிரிவு - 5

**66. கிலோவாட் எதன் அளவு?**

A. சக்தி
B. எதிர்ப்பு சக்தி
C. மின்சாரம்
D. மறைந்துள்ள வேறுபாடு

**67. பின்வருவனவற்றில் எந்த மாநிலம் அதிகமான வேர்க்கடலையை உற்பத்தி செய்கிறது-**

A. ஒரிசா
B. ஆந்திரப் பிரதேசம்
C. மத்தியப் பிரதேசம்
D. குஜராத்

**68. டீசல் ரயில் என்ஜின்கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன?**

A. பெரம்பூர் C. வாரனாசி
B. குவாலியர் D. போபால்

**69. ராடார் வானில் உள்ள பொருள்களைக் கண்டுபிடிக்க செலுத்தப்படும் அலைகள்-**

A. சூப்பர்சானிக் அலைகள்
B. அல்ட்ராசானிக் அலைகள்
C. மைக்ரோ அலைகள்
D. ஒலி அலைகள்

**70. மனிதர்களுக்கு எந்த உறுப்பு சரிவர வேலை செய்யாவிடில் டையாலிஸிஸ் செய்யப்படுகிறது**

A. இருதயம் C. சிறுநீரகம்
B. மூளை D. கல்லீரல்

**71. 'சத்யமேவ ஜயதே' என்ற வார்த்தைகள் எதிலிருந்து பெறப்பட்டது?**

A. முண்டக உபநிடதம்
B. தத்தாத்ரிய உபநிடதம்
C. கத் உபநிடதம்
D. மஹாயன உபநிடதம்

**72. புத்த பண்டிதர்களும் சந்நியாசிகளும் அடங்கிய சிறப்பு ஆலோசனை சபையை காஷ்மீருக்கு வரவழைத்தவர்-**

A. அசோகர்
B. ஹர்ஷர்
C. கனிஷ்கர்
D. சந்திரகுப்த மௌரியர்

**73. ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜுன் தேவுக்கு மரணதண்டனை வழங்கியவர்?**

A. ஷாஜஹான்
B. ஜஹாங்கீர்
C. அவுரங்கசீப்
D. இரண்டாம் பகதூர் ஷா

**74. இந்தியாவில் ஹோம்ரூல் இயக்கத்தை தொடங்கியவர்-**

A. மகாத்மா காந்தி
B. பாலகங்காதர திலகர்
C. அன்னி பெசன்ட்
D. லாலா லஜபதி ராய்

**75. சைதன்யர் பிரச்சாரம் செய்தது-**

A. கடவுளின் நாமத்தை ஜபிப்பது
